திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அவர் கரெக்ட் பண்ணுவதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ரெக்கார்ட் அச்சடித்து எல்லோருக்கும் கொடுக்கும்போது இதிலே இப்படி வந்திருக்கக் கூடாது. இதிலே இப்படி வருவது என்பது சரியல்ல; அதை நீங்கள் கரெக்ட் செய்ய வேண்டும்; அதைத்தான் நான் சொன்னேனே தவிர, நீங்கள் சொன்னதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த கொள்கை அன்றைக்கு சொன்னதற்கு நேர்மாறானது, அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 11-11-1987 **காலை** 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

78. 1964 ஆம் ஆண்டு சமய நிலையங்கள் மேலாண்மை மற்றும் **சொத்துக்களை பேணிக் காத்தல் விதிகளில்** சில திருத்தங்கள் **செய்வது** குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 9—7—1987 ஆம் நாளிட்ட 776 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு **இந்து** சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

79. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (இரயில் பயணப்படி) விதிகளை வகுப்பது குறித்து பொதுத் (சட்டமன்றப் பிரிவு) துறையின் 3—4—1987 ஆம் நாளிட்ட 546 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

1987 நவம்பர் 10]

80. "மாயவரம்" ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் வட்டம் ஆகியவற்றினை "மயிலாடுதுறை" ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும வட்டம் என மாற்றுவது குறித்து 20—8—1981 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 262-த.நா-87 ஆம் எண் அறிவிக்கை. [1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1950) 9 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—தொடர்ச்சி.

81. 1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

7. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

8. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS